<u>தேதி - 20.08.2024</u>

**<u>அசல் வழக்கு எண்.173/2004</u>**

**<u>வா.சா.2 - திருமதி. அம்சத்ராணி</u>**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.</u>**

<u>**2** முதல் **7** பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>

எனது தந்தைக்கு தாவாச் சொத்துக்கள் ஒவ்வொன்றும் எப்படி பாத்தியம் என்று எனது வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா 2 வது லக்கச் சொத்துக்களுக்குரிய சொத்து வரி இரசீதுகள் 1 ம் பிரதிவாதியான காஜா கமாலுதீன் பெயரில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. 2 முதல் 7 பிரதிவாதிகளான முஜிபா பேகம், சுலைகா, சுல்தான் அலாவுதீன் என்கிற சேட், இக்பால், அனிதா பர்வீன், ஷேக்அப்துல்லா ஆகியோர்கள் தான் தாவா சொத்துக்களுக்கு வரி செலுத்தி வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் தாவாச் சொத்துக்களுக்கு எந்த காலத்திலும் வரி செலுத்தியதில்லை என்று சொன்னால் சரிதான், எனது சித்தப்பா சிந்தாமதார் என்பவர் தான் செலுத்தி வந்தார். 16.08.1988 ல் நான் மைனர் என்றால் சொன்னால் அது சரியல்ல, நான் 04.05.1970 ல் பிறந்துள்ளேன். 04.05.1970 ல் நான் பிறந்தேன் என்று நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் ஆவணங்கள் உள்ளன. அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் நான் எந்த தேதியில் பிறந்தேன் என்பது தெரிந்துவிடும் என்றால் சரிதான். எனக்கு 13.11.1988 ம் தேதியன்று திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போது நான் மைனர் என்றால் சரியல்ல. இஸ்லாமிய மதத்தின்படி மைனராக இருந்தாலும் திருமணம் செய்து கொள்ளலாம் என்று சொன்னால் சரியல்ல. நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன், சாட்சி மீண்டும மாறி பத்தாம்வகுப்பு பாதியில் நின்றுவிட்டதாக கூறுகிறார். என்னுடைய திருமணம் மதுரையில் கே.கே.நகர், ஆனந்த மாளிகையில் திருமணம் நடைபெற்றது என்றால் மஹால் பெயர் ஞாபகமில்லை. திருமணத்தின் போது திரைப்பட பாடகர் கண்டசாலா என்பவர்

இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது என்று சொன்னால் சரியல்ல. எனது திருமணத்தின் போது எனது தகப்பனார் உயிருடன் இல்லாத காரணத்தினால் என்னுடைய சகோதரர் காஜாகமாலுதீன் தான் திருமணசெலவை செய்தார் என்றால் சரியல்ல, எனது சகோதரியும், தாயாரும் தான் எனக்கு திருமணம் செய்து வைத்தனர். 1988 வரை என்னுடைய தாயார் மற்றும் சகோதர, சகோதரிகள் ஒன்றாக கூட்டுக்குடும்பமாக தான் இருந்து வந்தோம் என்று சொன்னால் சரியல்ல. 1988 ல் செப்டம்பர் முதல் வாரத்தில் நான், என்னுடைய அம்மா, என்னுடைய சகோதரிகள் ஆகியோர்கள் சேர்ந்து கூட்டுக்குடும்ப சொத்துக்களை பொறுத்து பேச்சுவார்த்தை நடத்தினோம் என்று சொன்னால் சரியல்ல. அந்த பேச்சுவார்த்தையின் அடிப்படையில் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் அனைத்தையும் வாய்மொழியாக பாகம் பிரித்துக் கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியான காஜாகமாலுதீன் என்பவருக்கு மேற்சொன்ன வாய்மொழி பாகபிரிவினையின் போது தாவா 1 வது லக்கச் சொத்தில் கதவு எண்.28 ல் மொத்த மனைவீட்டில் மேல்புறமுள்ள மனையும், அதிலுள்ள 371 சதுரடியுள்ள மனைவீடும் மற்றும் தாவா 2ம் லக்கச் சொத்தில் 1584 சதுரடியுள்ள மனையும், தாவா 2ம் லக்கச் சொத்தின் 767 சதுரடியுள்ள மனைவீடும், தாவா 3ம் லக்கச் சொத்தின் 6631 சதுரடி காலிமனையும் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதே போல் 2ம் வாதியான அனார்கலி என்பவருக்கு வாய்மொழி பாகப்பிரிவினையின் போது அவரது பாகமாக தாவா 2 ம் லக்கச் சொத்தின் 754 சதுரடியுள்ள மனைவீடு ஒதுக்கீடு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 3ம் வாதியான செய்யது ராபியத் என்பவருக்கு வாய்மொழி பாகப்பிரிவினையின் போது அவரது பாகமாக தாவா 2ம் லக்க மொத்த சொத்தில் 330 சதுரடியுள்ள மனைவீடு ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதன்பிறகு நான் அந்த காலகட்டத்தில் மைனராக இருந்ததால் என்னுடைய தாயார் எனக்கு கார்டியனாக இருந்து 16.09.1988 ம் தேதியன்று 1 ம் பிரதிவாதியான காஜாகமாலுதீன் என்பவருக்கு மனைவீடு வகையறா பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால்

சரியல்ல. எனது தாயார் ஜெய்லானி என்பவரின் கையெழுத்து எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது, என்னிடம் காண்பிக்கப்படும் மேற்சொன்ன ஆவணத்தில் உள்ள கையெழுத்து எனது தாயாரின் கையெழுத்தா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. என்னுடன் சேர்ந்து வழக்கு நடத்தி கொண்டிருக்கும் மற்ற வாதிகளின் கையொப்பங்கள் மேற்சொன்ன ஆவணத்தில் உள்ளதா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. மற்ற வாதிகளின் கையெழுத்துகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது தாயார் மற்றும் எனது மற்ற சகோதரிகள் ஆகியோர்கள் 1ம் பிரதிவாதியான காஜாகமாலுதீன் என்பவரிடமிருந்து ரூ.1,00,000/- பெற்றுக் கொண்டு மேற்சொன்ன ஆவணத்தை எழுதி நிறைவேற்றி கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன ஆவணம் எழுதி நிறைவேற்றியதை பற்றியும், அதில் எனது தாயாரும், மற்ற சகோதரிகளும் கையொப்பம் செய்த விபரம் எனக்குத் தெரியும் என்று சொன்னால் சரியல்ல. 16.09.1988ம் தேதியன்று நடந்த வாய்மொழி பாகமானது நடைமுறைக்கு வந்து அவரவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பாகத்தை பொறுத்து மற்ற பாகஸ்தர்கள் தனித்தனி பாகப்பாத்திய விடுதலை பத்திரம் எழுதி நிறைவேற்றிக் கொடுத்தனர் என்று சொன்னால் சரியல்ல. 16.09.1988ல் 2ம் வாதியான அனார்கலி என்பவருக்கு மற்ற பாகஸ்தர்கள் மனைவீடு பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளனர் என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன ஆவணத்தில் ஜெய்லானி, 1ம் பிரதிவாதியான காஜாகமாலுதீன் மற்றும் செய்யதுராபியத், அப்துல் சகிலா, லைலத்துல் பஜரியா ஆகியோர் கையொப்பம் செய்துள்ளனர் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியான காஜாகமாலுதீன் பாகப்பிரிவினையில் தனக்கு கிடைத்த மனைவீடுகளில் வரும் வாடகைகளை தனது தாயார் 1ம் வாதியான ஜெய்லானி வசூல் செய்து ஜீவனாம் செய்து கொள்ள அனுமதித்து 16.09.1998ம் தேதியன்று ஒரு ஒப்பந்தம் எழுதிக் கொடுத்தார் என்று சொன்னால் சரிதான், ஆனால் அதை திரும்ப அவரே வாங்கி கொண்டார். அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் எனது தாயார் வாடகையை வசூல் செய்து வந்தார் என்று சொன்னால் சுமார் 4,

5 வருடங்களுக்கு எனது தாயார் வாடகை வசூல் செய்தார், ஆனால் அதன்பின்னர் 1ம் பிரதிவாதியான காஜாகமாலுதீன் வாடகை வசூல் செய்து கொண்டார். எனது தாயார் வாடகைதாரர்களான சுபேதாபீவி மற்றும் கமாலுதீன் ஆகியோர்களுக்கு இரண்டு தனித்தனி வாடகை ஒப்பந்தங்கள் மூலம் வாடகைக்கு விட்டிருந்தார் என்று சொன்னால் சரிதான். மேற்படி வீடுகளுக்கு வாடகை தலா ரூ.500/- ஆகும். எனது தாயார் எழுத்துமூலமான வாடகை ஒப்பந்தம் தான் செய்து கொண்டார் என்று சொன்னால் அதுபற்றி எனக்குத் தெரியாது. 2ம் வாதியான அனார்கலி என்பவர் அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் என்னுடைய மற்றொரு சகோதரியான லைலத்துல் பஜரியா என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட 15.08.1991ம் தேதியிட்ட அடமானப்பத்திரம் மூலம் எழுதிக் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன ஆவணத்தில் தனக்கு 16.09.1988ம் தேதிய பாகப்பத்திரம் மூலம் கிடைத்த சொத்தை அடமானம் வைப்பதாக வாசகங்கள் காணப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 2ம் வாதியான அனார்கலி என்பவர் முகமதுயூனுஸ் என்பவருக்கு அவர் பாகசொத்தை ஒத்திப்பத்திரம் மூலம் ஒத்தி வைத்தார் என்று சொன்னால் சரியல்ல. 2ம் வாதியான அனார்கலி ஒத்திதாரரான முகமதுயூனுஸ் என்பவருக்கே மேற்சொன்ன சொத்தை 26.08.1992ம் தேதியிட்ட பத்திரம் மூலம் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் பத்திரம் தான் மேற்சொன்ன பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் என்று சொன்னால் அதுபற்றி எனக்குத் தெரியாது. இந்த ஆவணங்கள் குறித்து பிரதிவாதிகள் கூடுதல் எதிர்உரையில் சொல்லியுள்ளதால் நான் அதுகுறித்து பத்திர அலுவலகத்தில் நகல் எடுத்து பார்த்தேனா என்றால் அதில் உண்மை இல்லாததால் நான் பார்க்கவில்லை. தாவா சொத்துக்கள் குறித்த வில்லங்க சான்றிதழில் மேற்சொன்ன ஆவணங்கள் குறித்து பதிவு உள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் கேட்கப்பட்ட ஆவணங்கள் பற்றி அந்த காலகட்டத்திலேயே எனக்குத் தெரியும் என்றும், ஆகையால் நான் ஆவணங்களை படிக்காமலேயே அதை மறுக்கிறேன் என்ற சொன்னால்

சரியல்ல. 2 ம் வாதியான அனார்கலி அவருக்கு பாகப்பிரிவினை மூலம் கிடைத்த மற்றொரு சொத்தை 20.01.1993 ம் தேதியன்று சரிபாபீவி என்பவருககு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 2 ம் வாதியான அனார்கலி கிரையம் செய்து கொடுத்த இர்ண்டு பத்திரங்களிலும் தனக்கு பாகபாத்திய விடுதலைப்பத்திரப்படி கிடைத்த சொத்துக்களை கிரையம் செய்து கொடுப்பதாக வாசகங்கள் கண்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் ஜெய்லானி யார் யாருக்கு என்னென்ன சொத்துக்கள் கொடுத்துள்ளார் என்றால் அவர் யாருக்கும் சொத்து கொடுக்கவில்லை. தற்போது நீதிமன்றத்தில் நான் அளித்த பதில்களில் எனது தாயார் ஜெய்லானி என்பவர் 2 ம் வாதியான அனார்கலிக்கும், மற்ற சகோதரிகளுக்கும் சொத்துக்கள் கொடுத்ததாக சொல்வது எந்த சொத்துக்கள் என்றால் எனது தாயார் ஜெய்லானி என்பவர் கொடுத்த நகைக்கு பதிலாக அவரது மாமாவான செய்யது இப்ராகிம் என்பவர் நாகூர்தோப்பில் உள்ள இரண்டு சொத்துக்களை எனது தாயருக்கு எழுதிக் கொடுத்த சொத்தில் எனது தாயார் ஜெய்லானி என்பவர் 2 ம் வாதியான அனார்கலிக்கும், 4 ம் வாதியான லைலத்துல் பஜரியாக்கும் எழுதிக் கொடுத்துள்ளார், அந்த சொத்துக்களுக்கும் தாவா சொத்துக்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. மேற்சொன்ன பத்திரங்கள் என்றைக்கு எனது தாயார் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் தேதி ஞாபகமில்லை, அவைகள் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. மேற்சொன்ன சொத்துக்கள் குறித்து தாவாவிலும், பிரமாணவாக்குமூலத்திலும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 3 ம் வாதியான செய்யது ராபியத் என்பவர் பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் மூலம் கிடைக்கப் பெற்ற சொத்துக்களை 21.12.1989 ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் மூலம் செல்வம் பீவி என்வருக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் அந்த ஆவணம் என்றால் அது சரியல்ல. இந்த ஆவணம் பற்றி எனக்கு தெரியும் என்பதால் அதை பார்க்காமலேயே நான் மறுக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 8 ம் பிரதிவாதியான அப்துல்சகிலா என்பவர்

பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் மூலம் கிடைக்கப் பெற்ற சொத்துக்களை 20.01.1990 ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் மூலம் காந்தியம்மாள் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் அந்த ஆவணம் என்றால் அது சரியல்ல. எனது சகோதரிகளிடம் இருந்து கிரையம் வாங்கியவர்கள் அவரவர் கிரையம் வாங்கிய சொத்துக்களில் வீடு கட்டி, அவர்கள் பெயருக்கு வரிமாற்றம் ஏற்பட்டு குடியிருந்து அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் விற்றது உண்மைதான், சாட்சி மீண்டும் மாறி அதை மறுக்கிறார். 4 ம் வாதியான லைலத்துல் பஜாரியா என்பவருக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்த போது, நிச்சயத்திற்கு முன்னர் அவருடைய கணவர்வீட்டார் பெண்ணுக்கு சொத்து கொடுக்கவேண்டும் என்று கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். அதன்பேரில் 1 ம் வாதியான ஜெய்லானி என்பவர் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து 30.11.1984 ம் தேதியன்று 4 ம் வாதியான லைலத்துல்பஜாரியா என்பவருக்கு ஹிபா எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் எனது தாயார் அவரது பாகத்தை பொறுத்து அவ்வாறு பத்திரம் எழுதி கொடுத்துள்ளார். அந்த ஹிபா பத்திரம் பதிவு செய்யப்பட்ட பத்திரம் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. 1 ம் பிரதியான காஜாகமாலுதீன் அவருக்கு பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் மூலம்கிடைத்த சொத்தை 21.09.1988 ம் தேதியன்று 4 ம் வாதியான லைலத்துல்பஜாரியா என்பவருக்கு ஈடுகடன் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் அதுபற்றி எனக்குத் தெரியாது. மேற்படி கிரையப்பத்திரங்கள், ஈடுகடன் பத்திரம் ஆகியவற்றில் தங்களுக்கு பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் மூலம் கிடைத்த சொத்துக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 4 ம் வாதியான லைலத்துல்பஜாரியா என்பவருக்கு ஹிபா மூலம் கிடைத்த சொத்தை அவர் 17.11.2004 ம் தேதியன்று நாகூர்பிச்சை என்பவருக்கு கிரையம் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. 4 ம் வாதியான லைலத்துல்பஜாரியா என்பவருக்கு ஹிபா மூலம் கிடைத்த சொத்தானது எங்கு அமைந்துள்ளது என்றால் மதுரையில் நெல்பேட்டையில் உள்ளது. மேற்படி சொத்தானது

நெல்பேட்டையில் ஆற்றுக்கு மேல்பகுதியில் அமைந்துள்ளது. அந்த இடத்தில் நாகூர்பிச்சை என்பவர் வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் அதுபற்றி எனக்குத் தெரியாது.

போதிய நேரமின்மை காரணமாக குறுக்குவிசாரணை இத்துடன் நிறுத்தம் செய்யப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.